In the Court of the I Additional District Judge, I Additional District Court, Namakkal.

O.S. No.204/2023

Time : 12.02 PM

Deposition of the PW.2 solemnly affirmed by this Court on 24.10.2024 in accordance with the provision of the Act X of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.ஜெயராமன் | Calling | : |
| Father/Husband Name | : திரு.மாரப்பன் | Village | : |
| Age : | | District | : |

வா.சா.2ன் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை –

நான் வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னது தான், அதில் கண்டுள்ள விவரங்கள் உண்மை என உறுதியாக கூறுகிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

4–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. இந்த வழக்கு பற்றி குப்புசாமிதான் என்னிடம் சொன்னார். இந்த வழக்கை யார், யார் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்கிற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அருணாச்சல கவுண்டருக்கு வாரிசு யாரும் இல்லை என்பதால் அவருடைய மருமகளான வாதி சரசு என்பவர் அருணாச்சல கவுண்டரை கடைசி வரை பார்த்துகொண்டு சொத்துக்களை எடுத்துக்கொள்ள

வேண்டும் என்பது வழக்கு. அருணாச்சலம்–காளியம்மாள் ஆகியோர்களுக்கு எத்தனை குழந்தைகள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அருணாச்சலம் மகன் குப்புசாமி என்பவருக்கு எத்தனை மனைவிகள் என்றால் இரண்டு மனைவிகள். குப்புசாமியின் மனைவிகள் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. குப்புசாமியின் மனைவிகள் இருவரும் இறந்துவிட்டனர். அருணாச்சல கவுண்டர் 2002ல் இறந்தார். காளியம்மாள் அவருக்கு முன்பாகவே இறந்துவிட்டார். ஆனால் வருடம் தெரியாது. அந்த சொத்து யார் பெயரில் உள்ளது, ஆதியில் யாருக்கு பாத்தியமானது என்பது எனக்கு தெரியுமா என்றால் அருணாச்சல கவுண்டர் கிரையம் வாங்கிய சொத்தாகும். அவருடன் வேறு யாரும் சொத்தை விலைக்கு வாங்கவில்லை. கிரிஷ் என்கிற கிருஷ்ணா என்பவர் யார் என்பது எனக்கு தெரியுமா என்றால் அவர் குப்புசாமியின் முதல் மனைவியின் மகன் மற்றும் வாதியின் தம்பி ஆவார். இந்த வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது என்றும், வாதி உள்ளூர்காரர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ள வாய்மொழி தானம் என்பது வாதி சொல்லிக்கொடுத்து நான் பொய்யாக கூறும் சங்கதி என்றால் சரியல்ல.

(விசாரணை முடிந்த நேரம் 12.10 PM)

In the Court of the I Additional District Judge, I Additional District Court, Namakkal.

O.S. No.204/2023

Time : 12.12 PM

Deposition of the PW.3 solemnly affirmed by this Court on 24.10.2024 in accordance with the provision of the Act X of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.அண்ணாதுரை | Calling | : |
| Father/Husband Name | : திரு.குழந்தாகவுண்டர் | Village | : |
| Age : | | District | : |

வா.சா.3ன் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை –

நான் வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னது தான், அதில் கண்டுள்ள விவரங்கள் உண்மை என உறுதியாக கூறுகிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

4–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் பி.ஏ படித்துள்ளேன். சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் வரவில்லை. சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திற்கு யார் அழைத்து வந்தார் என்றால் வாதி சரசு சொல்லி நானே நீதிமன்றத்திற்கு வந்தேன். சரசு எனக்கு என்ன உறவுமுறை என்றால் பங்காளி உறவுமுறை. இந்த வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்ன வழக்கு என்றால் அருணாச்சல கவுண்டரையும் அவரது மகன்

குப்புசாமியையும் கடைசி வரை வாதி சரசு பார்த்து வந்து சொத்துக்களை வாதி வைத்துக்கொள்ள வேண்டும் என சொன்னதால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி சரசு என்ன பரிகாரம் கேட்டு யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நிலத்தை விற்கும் உரிமையை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். யார் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. இந்த சொத்து எந்த கிராமத்தில் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் பழையபாளையம், சிதம்பரபட்டி கிராமத்தில் உள்ளது. அதன் சர்வே எண் தெரியாது. அந்த சொத்துக்கள் எப்படி வந்தது என்கிற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அருணாச்சல கவுண்டர் வாங்கிய சொத்துக்களாகும். அருணாச்சல கவுண்டர் அந்த சொத்துக்களை எந்த ஆண்டு யாருடன் சேர்ந்து வாங்கினார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அருணாச்சல கவுண்டர், குப்புசாமி இறக்கும்வரை அந்த சொத்துக்களை அனுபவித்து வந்தார்களா என்றால் 2000-ம் ஆண்டே சரசுவிடம் இருவரும் கொடுத்துவிட்டார்கள். எந்த ஆவணத்தின்படி கொடுத்தார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் விவசாயம் செய்து கொள்ளுமாறு கொடுத்துவிட்டார்கள். அவ்வாறு கொடுத்தற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் தெரியாது. அருணாச்சல கவுண்டருக்கு எத்தனை மகன்கள் என்றால் இரண்டு மகன்கள். அவர்களது பெயர்கள் நல்லுசாமி, குப்புசாமி. குப்புசாமிக்கு எத்தனை மனைவிகள் என்றால் இரண்டு மனைவிகள். முதல் மனைவி வாதியின் தாயார் ஆவார். அவர் பெயர் தெரியாது. இரண்டாவது மனைவி பெயர் தெரியாது. அவர் உயிருடன் உள்ளாரா என்றால் அவர் இங்கு இல்லை என்பதால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் இங்கு இல்லை என கூறுவது எந்த ஊரை குறிப்பிட்டு

கூறுகிறேன் என்றால் லக்கமநாய்க்கன்பட்டி கிராமத்தை கூறுகிறேன். அவர் சுமார் 20,25 ஆண்டுகளாக லக்கமநாய்க்கன்பட்டி கிராமத்தில் இல்லை. இரண்டாவது மனைவியை குப்புசாமி முதல் மனைவி இருக்கும்போதே 2–வது திருமணம் செய்து கொண்டாரா அல்லது முதல் மனைவி இறந்த பின்னர் திருமணம் செய்து கொண்டாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அருணாச்சல கவுண்டரின் மகன் நல்லுசாமியின் மனைவி பெயர் தெரியாது. நல்லுசாமி எந்த ஆண்டு இறந்தார், அவருடைய மனைவி எந்த ஆண்டு இறந்தார் என்கிற விவரம் எனக்கு தெரியாது. நல்லுசாமிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரே மகன். அவரது பெயர் காளிமுத்து. காளிமுத்து இறந்துவிட்டார். காளிமுத்துவின் மனைவி இருக்கிறாரா என்றால் கேரளாவில் உள்ளார். அவரது பெயர் தெரியாது. காளிமுத்துவின் மனைவி கேரளாவில் எத்தனை வருடங்களாக உள்ளார் என்றால் சுமார் பத்து வருடங்களாக உள்ளார். காளிமுத்துக்கும் அவரது மனைவிக்கும் ஒரு மகன் உள்ளார். அவருடைய மகன் பெயர் தெரியாது. குப்புசாமியின் இரண்டாவது மனைவிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு மகன். அவர் ஊரில் இருக்கிறாரா என்றால் இல்லை. எத்தனை வருடங்களாக ஊரில் இல்லை என்றால் 20 ஆண்டுகளாக சிதரம்பரப்பட்டி கிராமம், லக்கமநாய்க்கன்பட்டியில் இல்லை. வாதி சரசுயுடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை. அவர் ஒரே மகள். அருணாச்சல கவுண்டர் வாங்கிய சொத்தானது எந்த ஆண்டு வாங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. குப்புசாமி எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2002ல் இறந்தார். அருணாச்சல கவுண்டரின் மனைவி எந்த ஆண்டு இறந்தார் என்றால் தெரியாது. அவருடைய மனைவியின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி சரசு எனக்கு பங்காளி உறவுமுறை

என்பதால் அவர் சொன்னதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் குப்புசாமியும், அருணாச்சல கவுண்டரும் வாய்மொழி தானமாக கொடுத்தது என நான் எனது முதல்விசாரணையில் சொல்லியிருப்பது வாதி சொல்லிக்கொடுத்தற்கு இணங்க டைப் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(விசாரணை முடிந்த நேரம் 12.30 PM)